விடை--

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர் :

சிதம்பரத்திலிருந்து நர்க்கந்தன்குடி வழியாக ராதாவிளாகம் வரை இயக்கப்பட்டு வந்த நகரப்பேருந்து மேற்படி தடத்தில் நர்க்கந்தன்குடியிலிருந்து கோழிப்பள்ளம் வரையிலான சாலை, பேருந்து இயக்கத்திற்கு முற்றும் ஒவ்வாத நிலையில் சேதமடைந்து இருந்ததினால் நர்க்கந்தன்குடி வழியாக இயக்கப்படாமல் மாற்றுப்பாதை வழியாக இயக்கப்பட்டு வந்தது. தற்பொழுது நர்க்கந்தன் குடியிலிருந்து கோழிப்பள்ளம் வரையிலான சாலை, பேருந்து இயக்கிடுவதற்கேற்ப செப்பனிடப்பட்டுள்ளமையால், 15-7-1996 முதல் சிதம்பரத்திலிருந்து ராதாவிளாகம் வரை இயக்கப்பட்டு வரும் பேருந்து நர்கந்தன்குடி வழியாக இயக்கப்பட்டு வருகிறது.

27-

பரங்கிப்பேட்டை அரியகோஷ்டி இடையே பேருந்து இயக்குதல்

வினா எண் 1309--**திரு. அ.வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

புவனகிரி தொகுதி, பரங்கிப்பேட்டை இரயில் நிலையத்திலிருந்து அரியகோஷ்டி வழியாக கடலூருக்குப் பேருந்து இயக்கப்படுமா?

விடை--

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

பரங்கிப்பேட்டை இரயில் நிலையத்திலிருந்து அரியகோஷ்டி வழியாக சிதம்பரம்-கடலூர் பிரதான சாலை 3.2 கி.மீ. தொலைவிலுள்ளது. மேற்படி சாலைப் பகுதி கருங்கல் கப்பிச் சாலை. தற்பொழுது கற்கள் பெயர்ந்து சாலையில் பரவிக் கிடப்பதுடன் சாலை ஆங்காங்கே குண்டும் குழியுமாய் உள்ளது. மேலும் சாலை சீரமைப்புப் பணிக்காக கருங்கற்களும் செம்மண்ணும் சாலையோரத்தில் கொட்டி வைக்கப்பட்டுள்ளதால், சாலை மிகவும் குறுகலாக பேருந்து இயக்க இயலாத நிலையிலுள்ளது. பாதுகாப்பான பேருந்து போக்குவரத்திற்கு ஏற்ற வகையில் சாலை சீரமைக்கப்பட்ட பின்னர், பரங்கிப்பேட்டை இரயில் நிலையத்திலிருந்து அரியகோஷ்டி வழியாக கடலூருக்கு பேருந்து இயக்கிடக் கோரும் கோரிக்கை பரிசீலனை செய்யப்படும்.